# ஔவையாரின் ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

| | |
|---|---|
| 1. அறம் செய விரும்பு | 1. aRam seya virumbu |
| 2. ஆறுவது சினம் | 2. ARuvathu sinam |
| 3. இயல்வது கரவேல் | 3. iyalvathu KaravEl |
| 4. ஈவது விலக்கேல் | 4. Ivathu vilakkEl |
| 5. உடையது விளம்பேல் | 5. uDaiyathu viLambEl |
| 6. ஊக்கமது கைவிடேல் | 6. Ukkamathu kaiviDEl |
| 7. எண் எழுத்து இகழேல் | 7. eN ezhutthu igazhEl |
| 8. ஏற்பது இகழ்ச்சி | 8. ERpathu igazhchchi |
| 9. ஐயம் இட்டு உண் | 9. aiyam iTTu uN |
| 10. ஒப்புரவு ஒழுகு | 10. Oppuravu ozhugu |
| 11. ஓதுவது ஒழியேல் | 11. Othuvathu Ozhiyel |
| 12. ஔவியம் பேசேல் | 12. auviyam pEsEl |
| 13. அஃகம் சுருக்கேல் | 13. aHkam surukkEl |
| 14. கண்டொன்று சொல்லேல் | 14. KaNDonRu sollEl |
| 15. ஙப் போல் வளை | 15. ~gap POl vaLai |
| 16. சனி நீராடு | 16. sani ~nIraaDu |
| 17. ஞயம்பட உரை | 17. ~jayampaDa urai |
| 18. இடம்பட வீடு எடேல் | 18. iDampaDa veeDu eDEl |
| 19. இணக்கம் அறிந்து இணங்கு | 19. iNakkam aRi~nthu iNa~ggu |
| 20. தந்தை தாய் பேண் | 20. ta~nthai taay PEN |
| 21. நன்றி மறவேல் | 21. ~nanRi MaravEl |
| 22. பருவத்தே பயிர் செய் | 22. ParuvaththE Payir sey |
| 23. மண் பறித்து உண்ணேல் | 23. MaN PaRitthu uNNEl |
| 24. இயல்பு அலாதன செய்யேல் | 24. iyalbu alaathana seyyEl |
| 25. அரவம் ஆட்டேல் | 25. aravam ATTEl |
| 26. ஈலவம் பஞ்சில் துயில் | 26. Ilavam Pa~jcil tuyil |
| 27. வஞ்சகம் பேசேல் | 27. va~jsagam PEsEl |
| 28. அழகு அலாதன செய்யேல் | 28. azhagu alaathana seyyEl |
| 29. இளமையில் கல் | 29. iLamaiyil Kal |

| | |
|---|---|
| 30. அரனை மறவேல் | 30. aranai MaRavEl |
| 31. அனந்தல் ஆடேல் | 31. ana~nthal ADEl |
| 32. கடிவது மற | 32. KaDivathu maRa |
| 33. காப்பது விரதம் | 33. Kaappathu viratham |
| 34. கிழமைப்பட வாழ் | 34. KizhamaippaDa vaazh |
| 35. கீழ்மை அகற்று | 35. KIzhmai agaRRu |
| 36. குணமது கைவிடேல் | 36. guNamathu KaiviDEl |
| 37. கூடிப் பிரியேல் | 37. KooDip PiriyEl |
| 38. கெடுப்பது ஒழி | 38. KeDuppathu ozhi |
| 39. கேள்வி முயல் | 39. KELvi Muyal |
| 40. கைவினை கரவேல் | 40. Kaivinai KaravEl |
| 41. கொள்ளை விரும்பேல் | 41. KoLLai virumbEl |
| 42. கோதட்டு ஒழி | 42. KOdhaTTu ozhi |
| 43. கௌவை அகற்று | 43. Kauvai agaRRu |
| 44. சக்கர நெறி நில் | 44. sakkara ~neRi ~nil |
| 45. சான்றோர் இனத்து இரு | 45. saanROr inatthu iru |
| 46. சித்திரம் பேசேல் | 46. siththiram PEsEl |
| 47. சீர்மை மறவேல் | 47. sIrmai MaRavEl |
| 48. சுளிக்க சொல்லேல் | 48. suLikka sollEl |
| 49. சூது விரும்பேல் | 49. soodhu virumbEl |
| 50. செய்வன திருந்தச் செய் | 50. seyvana tiru~ndhach sey |
| 51. சேரிடம் அறிந்து சேர் | 51. sEriDam aRi~nthu sEr |
| 52. சையெனத் திரியேல் | 52. saiyenath tiriyEl |
| 53. சொற் சோர்வு படேல் | 53. soR sOrvu PaDEl |
| 54. சோம்பித் திரியேல் | 54. sOmbit tiriyEl |
| 55. தக்கோன் எனத் திரி | 55. takkOn enat tiri |
| 56. தானமது விரும்பு | 56. taanamadhu virumbu |
| 57. திருமாலுக்கு அடிமை செய் | 57. tirumaalukku aDimai sey |
| 58. தீவினை அகற்று | 58. tIvinai agaRRu |
| 59. துன்பதிற்கு இடம் கொடேல் | 59. tunbathiRku iDam KoDEl |
| 60. தூக்கி வினை செய் | 60. tookki vinai sey |
| 61. தெய்வம் இகழேல் | 61. teyvam igazhEl |
| 62. தேசத்தோடு ஒட்டி வாழ் | 62. tEsatthODu oTTi vaazh |
| 63. தையல் சொல் கேளேல் | 63. taiyal sol KELEl |
| 64. தொன்மை மறவேல் | 64. tonmai MaRavEl |
| 65. தோற்பன தொடரேல் | 65. tORpana toDarEl |
| 66. நன்மை கடைப்பிடி | 66. ~nanmai KaDaippiDi |
| 67. நாடு ஒப்பன செய் | 67. ~naaDu oppana sey |

| Tamil | Transliteration |
|---|---|
| 68. நிலையில் பிரியேல் | 68. ~nilaiyil PiriyEl |
| 69. நீர் விளையாடேல் | 69. ~nIr viLaiyaaDEl |
| 70. நுண்மை நுகரேல் | 70. ~nuNmai ~nugarEl |
| 71. நூல் பல கல் | 71. ~nool pala Kal |
| 72. நெற்பயிர் விளைவு செய் | 72. ~neRpayir viLaivu sey |
| 73. நேர்பட ஒழுகு | 73. ~nErpaDa ozhugu |
| 74. நைவினை நுணுகேல் | 74. ~naivinai ~nuNugEl |
| 75. நொய்ய உரையேல் | 75. ~noyya uraiyEl |
| 76. நோய்க்கு இடம் கொடேல் | 76. ~nOykku iDam KoDEl |
| 77. பழிப்பன பகரேல் | 77. Pazhippana PagarEl |
| 78. பாம்போடு பழகேல் | 78. PaambODu PazhagEl |
| 79. பிழைபடச் சொல்லேல் | 79. PizhaipaDach sollEl |
| 80. பீடு பெற நில் | 80. PeeDu PeRa ~nil |
| 81. புகழ்ந்தாரைப் போற்றி வாழ் | 81. Pugazh~ndhaaraip PORRi vaazh |
| 82. பூமி திருத்தி உண் | 82. Boomi tirutthi uN |
| 83. பெரியாரை துணைக் கொள் | 83. Periyaarai tunaik KoL |
| 84. பேதைமை அகற்று | 84. PEthaimai agaRRu |
| 85. பையலோடு இணங்கேல் | 85. PaiyalODu iNa~ggEl |
| 86. பொருள்தனைப் போற்றி வழ் | 86. PoruLthanaip PORRi vazh |
| 87. போர்த் தொழில் புரியேல் | 87. POrth tozhil PuriyEl |
| 88. மனம் தடுமாறேல் | 88. Manam taDumaaREl |
| 89. மாற்றானுக்கு இடம் கொடேல் | 89. MaaRRaanukku iDam KoDEl |
| 90. மிகைபடச் சொல்லேல் | 90. MigaipaDach sollEl |
| 91. மீதூண் விரும்பேல் | 91. mIthooN virumbEl |
| 92. முனைமுகத்து நில்லேல் | 92. Munaimugaththu ~nillEl |
| 93. மூர்க்கரோடு இணங்கேல் | 93. MoorkkarODu iNa~ggEl |
| 94. மெல்லி நல்லாள் தோள்சேர் | 94. Melli ~nallaaL tOLsEr |
| 95. மேன்மக்கள் சொல் கேள் | 95. MEnmakkaL sol kEL |
| 96. மை விழியொர் மனை அகல் | 96. Mai vizhiyor Manai agal |
| 97. மொழிவது அற மொழி | 97. Mozhivathu aRa Mozhi |
| 98. மோகத்தை முனி | 98. MOgaththai Muni |
| 99. வல்லமை பேசேல் | 99. vallamai PEsEl |
| 100.வாது முற்கூறேல் | 100.vaathu muRkoorEl |
| 101.வித்தை விரும்பு | 101.viththai virumbu |
| 102.வீடு பெர நில் | 102.veeDu Pera ~nil |
| 103.உத்தமனாய் இரு | 103.uththamanaay iru |
| 104.ஊருடன் கூடி வாழ் | 104.UruDan kooDi vaazh |
| 105.வெட்டெனப் பேசேல் | 105.veTTenap PEsEl |

| | |
|---|---|
| 106.வேண்டி வினை செயேல் | 106.vENDi vinai seyEl |
| 107.வைகறைத் துயில் ஏழு | 107.vaigaRait tuyil Ezhu |
| 108.ஒன்னாரை தேறேல் | 108.Onnaarai tEREl |
| 109.ஓரம் சொல்லேல் | 109.Oram sollEl |